**OS.No. 89/2013 PW : 2, திருமதி. சாந்தாம்மாள்**

**3, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

என் தம்பி முனுசாமி இறந்த தேதி, வருடம் எனக்கு ஞாபகமில்லை. இவ்வழக்கை தாக்கல் செய்தபோது முனுசாமி உயிரோடு இருந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. பாக ஆவணத்தில் நாங்கள் 6 பேரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் போட்டோம். அந்த ஆவணத்தை என்னிடம் காட்டினால் அது நாங்கள் கையொப்பம் போட்ட பாக ஆவணம் என்று எனக்கு சொல்ல தெரியாது. என்னுடைய கையெழுத்தையும், என்னுடைய சகோதரிகளில் கையெழுத்தையும் பார்த்தால் நான் சொல்வேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ22ல் உள்ள சாந்தா என்ற கையெழுத்து என் கையெழுத்து தான். அதில் உள்ள மற்ற கையெழுத்துக்கள் என் சகோதரியின் கையெழுத்துக்கள். வாசா1 மரகதவள்ளி என்னுடைய அக்காவின் மகள் ஆவார். மரகதவள்ளி சொல்லி தான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். மரகதவள்ளி நீதிமன்றத்திற்கு வந்து நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்று ஒவ்வொரு முறையும் என்னிடம் வீட்டில் சொல்வார். பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதும் நாங்களும் முனுசாமியும் ஒத்துமையாக தான் இருந்தோம் என்று சொன்னால் அப்போது சிறு பிரச்சனை இருந்தது. 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு நல்லது செய்யவேண்டும் என்று நானும், எங்கள் சகோதரிகள் அனைவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று மனப்பூர்வமாக கைரேகைகளை வைத்தோம், கையெழுத்தும் போட்டோம். பிளாட் எண்கள் 3, 4, 5, 7 ஆகியவற்றை நானும்

என் சகோதரிகளும் முனுசாமியும் சேர்ந்து கிரையம் கொடுத்தபோது நாங்கள் முனுசாமியுடன் ஒற்றுமையாக தான் இருந்ததோம். பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்ட பின்னர் தான் முனுசாமிக்கு திருமணம் ஆனது. முனுசாமி வேலை எதுவும் செய்யவில்லை. என் தந்தை ஒரு தனியார் பேருந்தில் ஓட்டுநராக இருந்தார். என் தந்தை சொத்து எதையும் சம்பாதிக்கவில்லை. தாவா சொத்துக்கள் என் பாட்டியின் சொத்துக்கள். என் தந்தையின் தந்தை பெயர் முனுசாமி. அவர் சொத்துக்களை சம்பாதித்து அவரது மனைவி விசாலாட்சி பெயரில் எழுதி வைத்தார். பாகப்பிரிவினையை ஒரு பிளாட் கொடுத்தார்கள். அந்த பிளாட் எண்ணோ, சர்வே எண்ணோ, அதன் அளவுகளோ எனக்கு தெரியாது. 1991ல் பாகஆவணம் எழுதி கொண்ட பின்னர் சொத்துக்களை எத்தனை தடவை பார்த்தேன் என்று கேட்டால் ஒரேஒரு தடவை பார்த்தேன். ஜூலை 2011ல் தாவா சொத்துக்களை அடையாளம் காண நான் சென்றதாக முதல் விசாரணையில் கூறியிருப்பது சரியானது தான். அப்போது நான் பார்த்த இடத்தில் பூங்கா வருகிறது என்றும் அதில் கட்டிடம் கட்டக்கூடாது என்று நகராட்சி அலுவலர் கூறினார். எங்களுக்கு கொடுத்த இடத்தில் பூங்கா வராமல் இருந்தால் நகராட்சி பிரச்சனை செய்யாமல் இருந்திருந்தால் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க மாட்டோம். பாகப்பிரிவினை படி முனுசாமிக்கு அதிக சொத்துக்கள் போவது பற்றி எங்களுக்கு வருத்தம் இல்லை. எங்களுக்கு ஒதுக்கிய சொத்துக்கள் எங்களுக்கு கிடைக்கவில்லை என்பது தான் மிகவும் வருத்தமாகும். முனுசாமி

அவருக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்களை அவர் வேறு வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்து விட்டார். அவர் எப்போது கிரையம் கொடுத்தார் என்று ஞாபகமில்லை. அவர் கிரையம் கொடுத்த பின்னர் தான் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்ட பின்னர் முனுசாமி அவர் இஷ்டத்துக்கு கிரையம் கொடுத்துவிட்டார். எங்களிடம் கையெழுத்து வாங்கவில்லை. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை முனுசாமி கிரையம் கொடுக்கவில்லை. அது பூங்கா இடமாகும். ஆகவே கிரையம் கொடுக்கவில்லை. 1991ம் வருடத்தில் இருந்து 2011ம் வருடம் வரை எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் பூங்கா இடம் என்று யாரும் அறிவிப்பு எதையும் எங்களுக்கு அனுப்பவில்லை. பிரேமா என்பவரது வீட்டில் வைத்து நாங்கள் பேசி இவ்வழக்கை தாக்கல் செய்தோம். முனுசாமி இறந்ததற்கு நாங்கள் 5 சகோதரிகளும் சென்றோம். அவர் இறந்தபின்னர் முனுசாமியும் இறந்துவிட்டார் என்றும் நமக்கும் சொத்தும் சேரவில்லை என்றும் இனி வழக்கு போடவேண்டும் என்று பிரேமா வீட்டில் உட்கார்ந்து பேசி வழக்கை தாக்கல் செய்தோம். எனக்கு உடல் நிலை சரியில்லாததால் எனக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கும்படி மரகதவள்ளியிடம் சொன்னேன். பிரேமாவுக்கும், எனக்கும், சாவித்திரிக்கும் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நகராட்சி பூங்காவிற்கு எடுத்துகொண்டது. மற்ற 2 சகோதரிகளின் சொத்துக்கள் என்ன ஆனது என்று தெரியவில்லை. என்னுடைய 2 சகோதரிகள் அவர்களின் சொத்துக்களை

விற்கவில்லை. என் அம்மா வேலைக்கு செல்லவில்லை. என் தந்தை ராஜிவ் பிள்ளை பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை. என் தாத்தா முனுசாமி அவரது மனைவி பெயரிலேயோ அவரது மகன் பெயரிலோ சொத்து வாங்கியிருந்ததாக நாங்கள் பிராதில் சொல்லியிருந்தால் அது தவறு தான். என் தந்தை அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு நோய்வாய் பட்டால் நாட்டுமருந்து தயார் செய்து கொடுப்பார். நானும் என் சகோதரிகளும் பெரிய அளவில் எதுவும் படிக்கவில்லை. என் தம்பி முனுசாமி 10ம் வகுப்புவரை படித்தார். என் தந்தை கடின உழைப்பாளி என்றும் அவர் தான் சம்பாதித்து எங்கள் அனைவரையும் காப்பாற்றினார் என்றால் சரியல்ல. அவர் எந்த வேலையும் செய்வில்லை. கீழே விழுந்த பொருட்களை கூட எடுக்கமாட்டார். நகராட்சி மீது தான் நாங்கள் வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் 1ம் பிரதிவாதி மீதோ அவரிடமிருந்து கிரையம் வாங்கியவர் மீது நாங்கள் வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. ஜோதி என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்தை வேண்டாம் என்று விற்றுவிடலாம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்களை அழைக்காமல் முனுசாமி கிரையம் கொடுத்த சொத்துக்களில் மட்டும் பாகம் கேட்கிறோம். இவ்வழக்கிற்கு பின்னர் தான் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு ஒரு புகாரை அனுப்பினோம். 1991ம் வருடம் முதல் 2011 வரை பட்டா மாற்றம் செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணம் சட்டப்படி செல்லும் என்றும் அதற்கு விரோதமாக முனுசாமி

நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே முனுசாமி அவர் பாகத்தை கிரையம் கொடுக்க எங்களின் கையொப்பத்தை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன என் தம்பிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி இறந்த விவரத்தை மறைத்து இறந்தவர் மீதும் வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தை படிக்காமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...

எனக்காக மரகதவள்ளி அளித்துள்ள சாட்சியத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம். அவர் சாட்சியம் அளித்த பின்னர் நான் மீண்டும் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் என்னை சாட்சி சொல்ல அழைத்தார்கள் நான் வந்தேன். வாசாஆ18 முதல் வாசாஆ21 வரையிலான ஆவணங்களை மரகதவள்ளி 2016ல் வாங்கி வைத்திருந்தார். ஏற்கனவே எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மரகதவள்ளி என்பவர் தான் வாங்கி தாக்கல் செய்துள்ளார். முனுசாமி அப்ரூவல் வாங்கி நிலத்தை பிளாட்களாக மாற்றினார். அவ்விதம் பிரித்த பிளாட்களை நானும், என் சகோதரிகளும், என் தம்பியும் சேர்ந்து கிரையம் கொடுத்தோம். நாங்கள் கடைசியாக ஒரு பிளாட்டை கிரையம் செய்து கொண்ட அன்று தான் பாகப்பிரிவினை ஆவணத்தை பதிவு செய்தேமா என்று கேட்டால்

பாகப்பிரிவினை பதிவு செய்தது எங்களுக்கு தெரியாது. என் தம்பி பாகப்பிரிவினை பத்திரத்தை பதிவு செய்யும்போது நாங்கள் 4, 5 முறை பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றதாக முதல் விசாரணையில் நான் சொல்லியிருக்கலாம். அனுசயாவின் கணவர் பெயர் பக்கிரிபிள்ளை. சாவித்திரியின் கணவர் பெயர் தெய்வசிகாமணி. தெய்வசிகாமணியும், பக்கிரிபிள்ளையும் அந்த பாக ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டார்கள். அனுசயா மனை எண்.2ஐ அவருடைய மகன் அனந்தராமனுக்கு எழுதி வைத்திருக்கிறார். 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணம் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் ஆகவே அது செல்லாது என்றும் நாங்கள் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. சர்வே எண் 503/2,1ஏ-ல் 2 ஏக்கர் 21 சென்ட் இல்லை என்றும் என் பாட்டி 1 ஏக்கர் 5 சென்ட் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. சர்வே 503/3ல் 2.05 சென்ட் வாங்கப்படவில்லை என்றும் 83 சென்ட் மட்டுமே வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1921ம் வருடத்திய ஆவணத்தில் பிரதிவாதிகள் சொல்லும் அளவுகள் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. பி அட்டவனை சொத்தில் விற்கப்பட்ட சொத்துக்களில் பாகம் வேண்டாம் என்றும் விற்கப்படாத மனைகளில் மட்டும் பாகம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 11, 12 பிரதிவாதிகள் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால்களுக்குள் உள்ள மனை எண் 9ஐ கிரையம் வாங்கியிருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் காட்டியிருக்கும் மனைகள் டி.டி.சி.பி.யில் அப்ரூவல் வாங்கப்பட்ட மனைகள்

ஆகும். என் சகோதரர் எங்களை ஏமாற்றிய விவரம் 1995ம் வருடமே எங்களுக்கு தெரியும். எங்களுக்கு ஏதாவது கொடுத்திருந்தால் நாங்கள் வழக்கை தாக்கல் செய்திருக்க மாட்டோம். 27 வருடமாக வழக்கை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முனுசாமி இறக்கும்வரை பேசாமல் இருந்துவிட்டு அவர் இறந்தபின்னர் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த பல நபர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கதக்கதில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், என்னுடைய மற்றொரு சகோதரி மற்றும் வாசா1 தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் தவிர்த்து மற்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**14 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.